உ
சிவமயம்

# உயர் திரு. சிவசுப்பிரமணியம் கண்ணன்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க திருத்தலங்களில் உயர்ந்த ஸ்தானத்தை பெற்றுக் கொண்ட நயினைதீவு நாகபூஷணி அம்மனின் உறைவிடமான நயினாதீவை பிறப்பிடமாக கொண்ட இராமநாதன் சிவசுப்பிரமணியம் அவர்கள் நயினாதீவு 3ம் வட்டாரத்தை சேர்ந்தவர். இவர் நயினாதீவு நடராசா இராசம்மா அவர்களின் புதல்வி நாகேஸ்வரி அவர்களை திருமணம் செய்து வர்த்தகம் காரணமாக கொழும்பில் தமது இல்லறத்தை நடாத்தினார் அகில இலங்கை ரீதியாக புகழ்பெற்ற வர்த்தக ஸ்தாபனமாக "கிளேப்ஸ் மணியம்" என செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட மணியம் ஸ்ரோர்ஸ் என்னும் பெயரில் கிறேப்ஸ், அப்பிள் மற்றும் பழவகைகளை இறக்குமதி செய்து வியாபாரம் நடைபெற்ற காலத்தில் அன்னாரின் இல்லறத்தில் மணிவண்ணன், சிவபாலன், சந்திரிகா, மேனகா, ரஞ்சினி, கண்ணன், ஜானகி, பாலசுப்பிரமணியம், ரமணா ஆகிய பிள்ளைச் செல்வங்களை சிறப்பாக பெற்று வளர்த்தார்கள். இவர்களில் ஆறாவது பிள்ளையான திரு. கண்ணன் அவர்கள் (காலம் சென்றவர்) தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்-கல்லூரியில் பெற்று மேற்படிப்பை குருத்தலாவையில் உள்ள சென். தோமஸ் கல்லூரியில் பெற்று வந்த காலத்தில் வெளிநாடு செல்லும் ஆசையினால் உந்தப்பட்டு 1983 தொடக்கம் 1989ம் ஆண்டுவரை அமெரிக்க நாட்டிலும் கனடா நாட்டிலும் வாழந்து மீண்டும் தந்தையாருடைய வர்த்தக நடவடிக்கையை தொடர்ந்தார்.

